உ

சுவாமியே சரணம் ஐயப்பா



மடிப்பாக்கம் ஸ்ரீ மணிகண்டன்

# மஹேலயமாலை

பிரஸாத் வெளியீடு
எண் : 1.

அனுமந்தபுரம்

அருட்கவி ஸ்ரீ காளிதாசர் அருளிய

# மடிப்பாக்கம் ஸ்ரீ மணிகண்டன்

# ம ஞ் ஞ ல ய மா லை

(விலை: திருப்பணி நன்கொடைக்காக பத்து பைசா)

வெளியிடுவோர் :

**பிரஸாத் பப்ளிகேஷன்ஸ்**

9, லஷ்மி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

தொலைபேசி : 422164

# பதிப்புரை

சென்னை பரங்கிமலைக்கருகில் மடிப்பாக்கம் என்னும் திருத்தலத்தில் அன்பர்க்கருளும் பொருட்டு சபரிமலைவாழ் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். சபரிமலையில் உள்ளது போல் அதே நியமங்களுடன் பூஜா காரியங்கள் சிறப்பாக நடந்து வருவதிலிருந்தே மூர்த்தியுடன் அங்கே அமைந்துள்ள பதினெட்டுத் திருப் படிகளின் ஸாந்நித்திய மகிமை பற்றி கூறவும் வேண் டுமோ! ஸ்ரீ சபரிமலைக் கோயில் பரம்பரை தந்திரியான பூஜ்யர் நீலகண்டரு தந்திரி அவர்கள் தாந்திரிக முறைப் படி விக்ரஹ பிரதிஷ்டை செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது. வேண்டுபவர்களுக்கு வேண்டிய வரந்தனை வாரி வழங்கும் வள்ளலாக அமர்ந்து அரசோச்சும் ஐயன், மடிப் பாக்கம் மணிகண்டனைப் போற்றி அருட்கவி ஸ்ரீ காளிதாசர் அருளிய "மலேலையமாலை" என்னும் இந்நூலை (20—8—78) இக்காளயுக்தி ஆண்டு ஆடித் திங்கள் உத்திராடமும் பௌர்ணமியும் கூடிய, ஸ்ரீ ஐயப்பன் மண்டலாபிஷேக பூர்த்தி நாளில் ஸ்ரீ காஞ்சி முனிவரின் அருள் கொண்டு வெளியிடுவதில் பெருமை அடைகிறோம். அலை பாயும் மனக் குதிரையை ஒரு வயப்படுத்தி சுவாமியே சரணம் ஐயப்பா என மடிப்பாக்கம் ஸ்ரீ மணிகண்டனின் திருவடிகளையே நினைந்து நினைந்து உருகி இம்மலேலைய மாலையைப் பாராய ணம் செய்து வழிபடுவோர், சகல செல்வமிக்க பெருவாழ்வு பெற்று பன்னெடுங்காலம் வாழ பிரார்த்திக்கின்றோம்.

—அ. மோகன கிருஷ்ணன்
பதிப்பாசிரியர்.

## ஸ்ரீ ஐயப்பன் ஆலயம்

மடிப்பாக்கம், சென்னை—43.

### சபரிமலையில் கோயில் திறந்திருக்கும் நாட்களும் மடிப்பாக்கம் ஸ்ரீ ஐயப்பன் ஆலய பதினெட்டு திருப்படிகள் திறந்திருக்கும் நாட்களும்

எல்லா மலையாள மாதம் 1-ந் தேதி முதல் 5-ம் தேதி வரை—ஆவணி திருஓணம்—கார்த்திகை 1 முதல் 41 நாட்கள் (மண்டல பூஜை) — மார்கழி 25 முதல் 12 நாட்கள் (மகர விளக்கு)—பங்குனி உத்திரம்— சித்திரை விஷு—வைகாசி ஹஸ்தம்.

உ

சுவாமியே சரணம் ஐயப்பா.

அனுமந்தபுரம்

அருட்கவி ஸ்ரீ காளிதாசர் அருளிய

# மடிப்பாக்கம் ஸ்ரீ மணிகண்டன்

# மனோலய மாலை

காப்பு

பொடியாகும் பொல்லா வினையென் றறிந்து
மடிப்பாக்க மாமணி கண்டனைப்-படிந்தேத்தும்
பைங்கம லத்தின் மலர்மனோ லயமாலை
ஐங்கரன் றன்கை யகத்து.

# நூல்

அருளைப் பொழியும் விழிமூன்றும்
அமுதச் சுடராய் அமைகின்ற
அருணன் அழலோன் மதியாக
அமைவுற் றொளிர்ந்தே அருள்வோனே
குருளை வடிவாய் குறைதீர்த்த
குழலார்த் திருமால் கனிந்தீந்த
குருவாய்த் திகழுங் குகனாகிக்
குருட்டைக் களையுங் குணத்தோனே
தெருளைத் தெருட்டித் தெளிகின்ற
தெகுளை மனத்தில் தருகின்ற
தெழிக்குந் தமிழால் தொடுக்கின்ற
தெரியல் அணியத் தொடர்வோனே
மருளை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 1



பதத்தைப் பிடித்தே படிகின்ற
பரமார் உளத்தைப் படைத்தோனே
பதினெண் படியைக் கடந்தேகி
பவளத் திருவைப் பணிவோமே
இதத்தை இதயம் இசைக்கின்ற
இயலாய் இயற்றும் வகையோடு
இடரைக் களையும் எழிலாக
இகத்தின் அருளும் இறையோனே
வதத்தை விழையா உளமென்னும்
வலையிற் படிய வருவோனே
வடக்கார் சபரி வரைவாழும்
வளத்தால் விளங்கும் வரத்தோனே
மதத்தை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 2

8

அறத்தை அவனி அறிந்தோரே
அரிதின் விளையும் அமுதாவார்
அபயம் சரணம் அடியார்க்கே
அமைதி அகத்தில் அமைத்தோனே
நிறத்தை நினைவிற் களைந்தேத்த
நிதியாய் இதயத் துறைவோனே
நிதமும் நிகழும் நிருத்தத்தால்
நிலைக்கும் நிலயத் தொளிர்வோனே
புறத்தைப் பெரிதும் புரக்கின்ற
புகைசேர் உளத்தில் புரள்கின்ற
புரையைக் களையும் புகழோனே
புகலாய்ப் புகுவோர்க் கருள்வோனே
மறத்தை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 3

9

கயலை விழிகொள் கலையாகக்
கருமை எழுதுங் கவிஞரைக்
கனவின் நினைவின் கருதாதே
கணத்தின் நிலைத்தார் மனத்தோனே
செயலைத் தவமார் செயலாகச்
செழிக்கச் சிறக்குஞ் சுடரோனே
செடிக்கும் வினையைச் சினையோடு
செகுக்கும் மனத்தில் செறிந்தோனே
புயலை மனத்தில் புகுத்தாதே
புதுமை விளைக்கும் மனத்தோனே
புகழால் அகந்தை வளராதே
புலத்தால் பணியப் புரிவோனே
மயலை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 4

நமனும் நடுங்கிப் பணிசெய்ய
நடமே புரியும் சிவநாதன்
நயந்து மகிழும் சரணத்தான்
நலமே நினையும் நினைவுற்றே
தமரும் தனமும் தனக்கென்று
தருக்கித் திரிந்த திறமெல்லாம்
தகரும் தடத்தில் தொடுத்தீர்த்த
தகைமை மொழியத் தடையுண்டோ?
சிமயச் சிகரந் தனிலுற்ற
சிவனார் அளித்த சிவச்சேயே
சிறுமை களைந்த சுடரோனே
சினத்தை அகற்றுஞ் சிலையோனே
மமதை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 5



எதனை இதயம் இனிதேத்த
எழாது பிறவி எனலாகும்
எழுதிப் புனையா எழிலோடு
எடுத்துத் தொடுக்கும் இறையோனே
அதனை அருளாய் அகமொன்ற
அசையும் வெளியின் ஒலிகேட்க
அசையா வெளியின் ஒளிகாண
அமரர் மிகுவாழ் வுறலாமே
நிதனை நினையும் நினைவற்று
நிரயத் துறைவார் நிலைதேர்ந்து
நிமலன் நிகர்க்கும் நிதியொன்றும்
நிலையார் இதயம் நிறைவோனே
மதனை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 6

அடியைப் பரவும் அறவோரின்
அணித்தே வளரும் அழகோனே
அகத்தின் அருளும் அமரோனே
அறஞ்செய் பிடியின் அளவுற்று
முடியில் இரண்டு முடியேந்தி
முழங்கிச் சரண மொழிகூறி
முறையாய்ப் பணிந்து தொழுவாரின்
முடியா முழுமை முதல்வோனே
நொடியில் இமைக்கும் பொழுதங்கு
நுதற்கண் மிசையுற் றொளிர்கின்ற
நொசிப்பின் நிறைவாய் நினைவார்க்கு
நொறுங்கும் வினையாம் நலங்கொண்டே
மடியை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 7



படத்தை விரிக்கும் பணியோடு
பகலில் பதுங்கும் மதிசூடிப்
பரியை நரியை உருமாற்றும்
பரனூர் பயந்த பதியோனே
விடத்தை விழுங்கி இடுகாட்டில்
விளையா டிமகிழ் விநோதன்றன்
விரும்பிப் பயந்த விளைவாலே
வினையைக் களைய வருவோனே
திடத்தைத் திணித்துத் திறமுற்ற
திகிரிப் படையால் திளைக்கின்ற
திகைப்பைக் களையுந் திருமாலின்
திருவார்த் திலகாய்த் திகழ்வோனே
மடத்தை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 8

14

கலியின் கொடுமை கணக்கில்லை
கருத்தைக் கெடுக்கும் கவனஞ்சேர்
கயமை வளரும் புவனத்தில்
கனிவைக் கனிந்து தருகின்றாய்
ஒலியும் புனலும் வளியோடு
ஒளியும் புவியும் உயர்வோடு
ஒருங்குஞ் செயலால் உயிரோடு
ஒளிசெய் கதிர்கள் இரண்டோடு
புலியின் மிசையாய் இவர்ந்தோனே
புனிதம் முறையாய் பகர்ந்தோனே
புகலுந் தமிழைச் செவிகொண்டு
புனலாய் அருளைப் பொழிவோனே
மலினம் மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 9

15

சிறுமைச் செயலைச் செகுத்தாளும்
சிகியின் நிறத்து முகுந்தன்றன்
சிவனார் அருளின் துணையோடு
சிவமார் பொலிவின் சிறப்போடு
நறுமை மணக்க நலஞ்சேரும்
நலங்கொள் வகையில் நயந்தீந்த
நசையில் சபரி கிரியோனை
நணுகி நினைந்து மகிழ்நெஞ்சே
வறுமைப் பிடியை விரைந்தோட்டும்
வகையில் விளங்கி விளையாடும்
வளத்தை வழங்கும் வயத்தோனே
வரைசூழ் சபரி கிரியோனே
மறுவை மழிக்கும் மொழிகொண்ட
மறையோர் மனத்தின் மகிழ்வோனே
மடிப்பாக் கமுறை மணிகண்ட
மகேச சுதனே மலையோனே 10

# நூற்பயன்

தனோபல சித்தந் தகைமணி கண்டன் திருவடியால்
மனோரத மேறி மகிழ்வுறு மேன்மை மிகுநலத்தை
வினோதமார் வண்ண விளக்கொளி நண்ணும் வகையுறுவார்
மனோலய மாலை மனத்துரு வேற்றிப் பணிபவரே,

———

காளிதாஸ் பிரஸ், சென்னை—600024.